மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.
முன்னிலை... திருமதி.செ.அபிலா, எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர் எண்.1, ஸ்ரீவில்லிபுத்தூர்.
2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 22 ம் நாள் திங்கட்கிழமை
அசல் வழக்கு எண்.325/2015
.....

தசரதப்பெருமாள் ... வாதி

.... எதிர் .....

1) தாசில்தாரர்
ஸ்ரீவில்லிப்புத்தூர்
2) வருவாய் கோட்டாட்சியர்
சிவகாசி
3) காவல்துறை ஆய்வாளர்
மல்லி காவல் நிலையம்
4) மனோன்மணி
5) குருநாதன்

...பிரதிவாதிகள்

Amendend as per order passed in I.A.No.1/2023 dated: 11.09.2023

**<u>தீர்ப்புரை</u>**

பிராது 1 வது தபசில் சொத்து (A B C D) ல் அமைந்துள்ள தென்வடல் பாதை (சர்வே எண்.985–2/1B14) வாதிக்கும் மற்றும் மற்ற பங்காளிகளுக்கு மட்டுமே தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், இந்நிர் 1 ம் பிரதிவாதி, இந்நிர் 2 முதல் 5 பிரதிவாதிகளின் துணையுடன் கடந்த 07.11.2015 ம் தேதியில் இடித்து தள்ளிய பிராது 2 வது தபசில் சொத்தான 'EF' காம்பவுண்டு சுவரை வாதி சொந்த செலவில் கட்டிக் கொள்ளுபடியும், அதற்கு ஏற்படும் செவுத் தொகையை இந்நிர் 1 முதல் 5 பிரதிவாதிகள் செலுத்தி வைக்கும்படி ஒரு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், இந்த வழக்கின் செலவு, தொகையை வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்துவிடும்படிக்கும், இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் செய்த நாள் | : | 02.11.2015 |
| இறுதி விசாரணை செய்த நாள் | : | 29.04.2026 |
| தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | : | 22.06.2026 |

S ABILA Digitally signed by S ABILA

| | | |
|---|---|---|
| வாதிக்காக | : | திரு.V.ரவிராஜ் – வழக்கறிஞர் |
| 1 , 2 பிரதிவாதிகளுக்காக | : | திரு.ஆர்.ரவிக்குமார்– அரசு வழக்கறிஞர் |
| 3 ம் பிரதிவாதிக்காக | : | திரு.P.திலகராஜ் – வழக்கறிஞர் |
| 4, 5 ம் பிரதிவாதிகளுக்காக | : | திரு.P.ரமேஷ் – வழக்கறிஞர் |

1) பிராதின் சுருக்கம் –

பிராது தபசில் சொத்தின் பழைய அயன் புஞ்சை சர்வே எண்.985/1B2 ஆகும். அதன் பட்டா எண்.1014 ஆகும். அதன் தற்போதைய புதிய சர்வே எண்.985–2/1B14 ஆகும். அதன் புதிய பட்டா எண்.1885 ஆகும். பிராது தபசில் சொத்து வாதியின் வீட்டிற்கும் மற்ற பங்காளிகளின் வீட்டிற்கும் கிழக்கு பக்கம் அமைந்துள்ள 'ABCD' தென்வடல் பாதையாகும். அதில் EF காம்பவுண்ட் சுவர் அமைந்துள்ளது. அது வாதியின் 19.08.2013–ம் தேதிய பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தில் உள்ள சர்வே எண்.985/21B12–ஐ உள்ளடங்கிய நடைபாதையாகும். சர்வே எண்.985/21B12 ல் உள்ள வீடு ஆதியில் பெருமாள்சாமி நாயக்கர் மனைவி லலிதா அம்மாள் அவர்களுக்கு 19.10.1975–ம் தேதிய பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் மூலம் பாத்தியப்பட்டதாகும். மேற்படி சொத்தை லலிதா அம்மாள் அவர்கள் ஒரு ரெங்கசாமி நாயக்கரிடம் பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரம் மூலம் கிரையம் பெற்றார். பிராது நடைபாதையானது கடந்த 25.04.1963 ம் வருடத்தில் வாதியின் பெரியப்பா வெங்கடசாமி நாயக்கர், சௌரிராஜ பெருமாள் நாயக்கர், சீ.வெங்கிடசாமி நாயக்கர், சங்கம் நாயக்கர், சீனிவாச நாயக்கரை, மா.கிருஷ்ணசாமி நாயக்கர், கி.மா.பெருமாள்சாமி நாயக்கர் ஆகியோர்கள் தங்களுக்குள் இதன் தபசில் சொத்தைப் பொறுத்து A B C D நடைபாதையாக பயன்படுத்திக்கொள்வதாக ஒரு ஒப்பந்தம் எழுதிக்கொண்டார்கள். அதன்படி நாளது தேதி வரை மேற்படி பாதையானது இந்நிர் வாதிக்கும் மற்ற பங்காளிகளுக்கும் தனித்து பாத்தியப்பட்டதாகும். அதில் வேறு நபர்களுக்கு அனுபவமோ, பாத்தியமோ, உரிமையோ இல்லை.

இந்நிர் 4 மற்றும் 5 பிரதிவாதிகள் மேற்படி வாதிக்கும் மற்ற பங்காளிகளுக்கு மட்டும் பாத்தியப்பட்ட பிராது தபசில் சொத்து தென்வடல் நடைபாதையில் கடந்த

S ABILA Digitally signed by S ABILA

09.01.2015–ம் தேதியில் ஆக்கிரமிப்பு செய்து சுவர் எழுப்ப முயற்சி செய்தார்கள். அதை இந்நிர் வாதியும் மற்றும் மற்ற பங்காளிகளான சங்கம நாயக்கர் மகன் சீனிவாசன் ஆகியோர்கள் தடுத்து நிறுத்திவிட்டார்கள். மேலும் பிராது தபசில் சொத்திற்குண்டான சர்வே எண்.985–2/1B14 என்பதை வேண்டுமென்றே சர்வே எண்.985/2N/3D2 என்று குறிப்பிட்டு மோசடி செய்து திருத்தம் செய்துள்ளார்கள். எனவே வாதியானவர் பிராது தபசில் சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

2) 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்–

வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா வழக்கு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. வாதி சொத்து விவரத்தில் சொல்லியுள்ள மல்லி புல எண்.985–2/1B14 வருவாய்துறை ஆவணங்களில் பூஸ்தி பாதையென பதிவு ஏற்பட்டு பிற்பாடு பொது தெருவாக வெகுகாலமாக பொதுமக்களால் புழங்கப்பட்டு வருகிறது. 985–2/1B14 தற்சமயம் தென்வடல் தெருவாகும். மேற்படி தெரு வழியாகத் தான் கடைசியில் உள்ள காலணி வீடுகளுக்கு செல்லவும் முடியும். பொதுப்பாதையான தெருவில் வாதி ஆக்கிரமிப்பு செய்திருந்தது உண்மை. வாதி வழக்கில் சொல்லியுள்ள அரசுக்கு பாத்தியமான தெருவில் இருந்த ஆக்கிரமிப்பு பகுதி அகற்றப்பட்டு விட்டது. வாதியின் கோரிக்கை பயனற்றது. மேலும் வாதி அரசுக்கு பாத்தியப்பட்ட தெருவில் மீண்டும் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்ட அருகதையற்றவர். இந்நிர் பிரதிவாதியின் கூடுதல் செலவு தொகையுடன் இவ்வழக்கை தள்ளுபடி செய்யுமாறு குறிப்பிட்டுள்ளார்.

**3) 3 ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையின் சுருக்கம்–**

வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா வழக்கு சட்டப்படியும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டாட்சியர் அவர்கள் காவல் துணை கண்காணிப்பாளர், ஸ்ரீவில்லிப்புத்தூர் அவர்களுக்கு வட்டாட்சியர் அலுவலக ந.க.ஆ.1/12464/2015 நாள் 06.11.2015 கடிதப்படி 07.11.2015 அன்று மல்லி கிராமத்தில் வட்டாட்சியர் தலைமையில் நில அளவை செய்வதற்கு பாதுகாப்பு வழங்கி கோரியிருந்தார். அதன்படி இந்நிர் பிரதிவாதி பந்தோபஸ்து ஏற்பாடு செய்து கொடுத்தார்.



S ABILA Digitally signed by S ABILA

அது சமயம் மல்லி VAO தர்மகிருஷ்ணன் மற்றும் 11 பேர் அளவீடு செய்வதற்கு இடையூறு செய்து கொலை மிரட்டல் செய்வதாக மல்லி காவல்நிலையத்தில் 07.11.2015–ல் புகார் கொடுத்தார். தாவா வழக்கின் வழக்கு மூலம் தவறு என மறுக்கப்படுகிறது. தாவா வழக்கில் வாதி கோரியுள்ள எந்த ஒரு பரிகாரமும் இந்நிர் பிரதிவாதியிடம் இருந்து கிடைக்கக்கூடியதல்ல.

**4) 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்–**

வாதியின் வழக்கு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. பிராது தபசில் சொத்தானது அரசுக்கு பாத்தியப்பட்ட தெருவாகும். அதில் வாதிக்கு தனிப்பட்ட பாத்தியதையோ உரிமையோ கிடையாது. தபசில் சொத்தில் கட்டப்பட்டிருந்து EF சுவர் இப்பிரதிவாதிகளுக்கு மட்டுமல்ல பொதுமக்கள் அனைவருக்கும் நாள்தோறும் தொடர் தொல்லை ஏற்படுத்தும் நோக்கத்துடன் வாதியால் சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பு செய்து ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக 07.11.2015–ம் தேதியில் 1 முதல் 3 பிரதிவாதிகளால் சட்டத்திற்கு உட்பட்டு அப்புறப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே பிரதிவாதிகளின் ஆக்கிரமிப்பு செயலை தடுக்க வேண்டிய பேச்சுக்கே இடமில்லை. தபசில் சொத்து மேலே கூறியபடி அரசுக்கு பாத்தியப்பட்ட தெரு என்பதாலும், அதில் வாதி சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பு செய்து சுவர் எழுப்பியதாலும் அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொதுமக்கள் நகல் கருதி அரசு காப்பாற்ற கடமைப்பட்டுள்ளதாலும் 1 முதல் 3 பிரதிவாதிகளே 07.11.2015–ம் தேதியில் அகற்றியுள்ளார்கள். எனவே வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல.

5) வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.

1) Whether the Plaintiff is entitled to claim declaration regarding pathway in first schedule property as prayed for ?

2) Whether the Plaintiff is entitled to claim Mandatory Injunction as prayed for?

S ABILA Digitally signed by S ABILA

3) Whether the suit is bad for Mis-Joinder of unnecessary party?

4) To What other reliefs ?

6) வாதி தனது தரப்பை நிரூபிக்க வாதியான தசரதப்பெருமாள் என்பவர் வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.16 வரையிலான ஆவணங்களும், குறுக்கு விசாரணையில் பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஆக மனோன்மணி விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.3 முதல் பி.வா.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

7) வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில் வாதி அவரது வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபித்துள்ளதால், வாதி கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

8) பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், அவருடைய வாதுரையில் வாதி அவரது வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபிக்கவில்லை என்பதால், வாதி கோரியுள்ள பரிகாரங்கள் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என வாதிட்டார்.

**வழக்கெழு வினா 1 மற்றும் 2**

வாதி பிராது 1 வது தபசில் சொத்து (A B C D) ல் அமைந்துள்ள தென்வடல் பாதை (சர்வே எண்.985-2/1B14) வாதிக்கும் மற்றும் மற்ற பங்காளிகளுக்கு மட்டுமே தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், இந்நிர் 1 ம் பிரதிவாதி, இந்நிர் 2 முதல் 5 பிரதிவாதிகளின் துணையுடன் கடந்த 07.11.2015 ம் தேதியில் இடித்து தள்ளிய பிராது 2 வது தபசில் சொத்தான 'EF' காம்பவுண்டு சுவரை வாதி சொந்த செலவில் கட்டிக் கொள்ளுபடியும், அதற்கு ஏற்படும் செவுத் தொகையை இந்நிர் 1 முதல் 5 பிரதிவாதிகள் செலுத்தி வைக்கும்படி ஒரு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், இந்த வழக்கின் செலவு, தொகையை வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்துவிடும்படிக்கும், இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்கு வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.அ.16 வரையிலான ஆவணங்கள் குறியீடு



S ABILA Digitally signed by S ABILA

செய்யப்பட்டுள்ளதுமாகும். மேலும் வா.சா.1 குறுக்கு விசாரணையில் பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளதுமாகும். மேற்படி பிராது தபசில் சொத்தைக் காட்டக்கூடிய அளவுக்குட்படாத வரைபடம் – அசல் **வா.சா.ஆ.1** ஆகவும், 15–04–2015 தேதியிட்ட பிராது தபசில் சொத்தை காட்டக்கூடிய பட்டா எண் – 1885, சர்வே எண்.985–2 1B14 – அசல் **வா.சா.ஆ.2** ஆகவும், 25–04–1963 தேதியிட்ட பிராது தபசில் சொத்தை பொறுத்து வாதியின் பங்காளிகள் எழுதிக் கொண்ட நடைபாதை ஒப்பந்தம் – அசல் **வா.சா.ஆ.3** ஆகவும், 19–10–1975 தேதியிட்ட ரெங்கசாமி நாயக்கர் லலிதா அம்மாளுக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரம் – அசல் **வா.சா.ஆ. 4** ஆகவும், 16–04–2015 தேதியிட்ட பிராது தபசில் சொத்தைப் பொறுத்து வருவாய்துறை அதிகாரிகளால் வழங்கப்பட்ட 'அ' பதிவேடு – அசல் **வா.சா.ஆ.5** ஆகவும், 25–01–2015 தேதியிட்ட 4ம் பிரதிவாதி மனோன்மணி மல்லி காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்த 'முச்சலிக்கா' – உண்மை நகல் **வா.சா.ஆ.6** ஆகவும், 30–04–2015 தேதியிட்ட பிராது தபசில் சொத்தை பொறுத்து வாதி 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய புகார் மனு – நகல் **வா.சா.ஆ.7** ஆகவும், 06–05–2015 தேதியிட்ட மேற்படி மனுவை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை – அசல் **வா.சா.ஆ.8** ஆகவும், 30–04–2015 தேதியிட்ட பிராது தபசில் சொத்தைப் பொறுத்து வாதி 2ம் பிரதிவாதிக்கு அனுப்பிய புகார் மனு – நகல் **வா.சா.ஆ.9** ஆகவும், 05–05–2015 தேதியிட்ட மேற்படி மனுவை 2ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை – அசல் **வா.சா.ஆ.10** ஆகவும்,20–10 –2015 தேதியிட்ட வாதி 1ம் பிரதிவாதி மீது 2ம் பிரதிவாதியிடம் பிராது தபசில் சொத்தைப் பொறுத்து கொடுத்த புகார் மனு – நகல் **வா.சா.ஆ.11** ஆகவும், 27–10–2015 தேதியிட்ட வாதிக்கு 2ம் பிரதிவாதி பிராது தபசில் சொத்தைப் பொறுத்து அனுப்பிய குறிப்பாணை – அசல் **வா.சா.ஆ.12** ஆகவும், 30–10–2015 தேதியிட்ட வாதி முன்ஜாமீன் கேட்டு தாக்கல் செய்த மனு – நகல் **வா.சா.ஆ.13** ஆகவும், 19–08–2013 தேதியிட்ட வாதிக்கு, லலிதா எழுதிக் கொடுத்த கிரையயப்பத்திரம் – சப்ரி நகல் **வா.சா.ஆ.14** ஆகவும் 19–10–2015 தேதியிட்ட வாதி செலுத்திய தீர்வை – அசல் (எண்ணம்–1) **வா.சா.ஆ.15** ஆகவும், 05.11.2015 தேதியிட்ட W.P.(MD) No.20083/2015 ல் பிராது தபசில் சொத்தைப் பொறுத்து பிரதிவாதிகளுக்கு எதிராக வழங்கப்பட்ட Interim Stay நகல் **வா.சா.ஆ.16** ஆகவும்



S ABILA Digitally signed by S ABILA

குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பிரதிவாதிகள் தரப்பில் 4ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு பி.வா.சா.ஆ.3 முதல் பி.வா.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளதுமாகும். 29-11-2013 தேதியிட்ட தவமணி மற்றும் பத்மாவதி ஆகியோர்கள் சேர்ந்து 4ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் – சார்பதிவக நகல் **பி.வா.சா.ஆ.3** ஆகவும், 4ம் பிரதிவாதியின் தாய்வழி தாத்தா பலராமன் பெயரில் உள்ள பட்டா – கணிணி நகல் **பி.வா.சா.ஆ.4** ஆகவும், 4ம் பிரதிவாதி பெயரில் உள்ள வீட்டுவரி தீர்வை ரசீது – அசல் **பி.வா.சா.ஆ.5** ஆகவும், 08-07-2015 தேதியிட்ட 4ம் பிரதிவாதி கணவர் (5ம் பிரதிவாதி மகன்) ஜெயச்சந்திரனுக்கு திருவில்லிபுத்தூர் வட்டாட்சியர் அனுப்பிய அறிக்கை –

அசல் **பி.வா.சா.ஆ.6** ஆகவும், 11-09-2015 தேதியிட்ட மேற்படி ஜெயச்சந்திரனுக்கு சிவகாசி சார் ஆட்சியர் அனுப்பிய குறிப்பாணை அசல் **பி.வா.சா.ஆ.7** ஆகவும், 28-10-2015 தேதியிட்ட மேற்படி ஜெயச்சந்திரனுக்கு திருவில்லிபுத்தூர் வட்டாட்சியர் அனுப்பிய குறிப்பாணை – அசல் **பி.வா.சா.ஆ.8** ஆகவும், 18-11-2015 தேதியிட்ட மேற்படி ஜெயச்சந்திரனுக்கு சிவகாசி சார் ஆட்சியர் அனுப்பிய குறிப்பாணை – அசல் **பி.வா.சா.ஆ.9** ஆகவும், வில்லங்க சான்றிதழ் – கணிணி நகல் **பி.வா.சா.ஆ.10** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தனது வழக்குரையில் தபசில் கண்ட சொத்து ஆதியில் பெருமாள்சாமி மனைவி லலிதாம்மாளுக்கு 19.10.1975ல் பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தின் மூலம் பாத்தியப்பட்டது என்றும், 25.04.1963-ம் தேதியில் வாதியின் பெரியப்பா வெங்கடசாமி நாயக்கர், சௌரிராஜ பெருமாள் நாயக்கர், சீ.வெங்கடசாமி நாயக்கர், சங்கம நாயக்கர், சீனிவாச நாயக்கரை, மா.கிருஷ்ணசாமி நாயக்கர், கி.மா.பெருமாள்சாமி நாயக்கர் ஆகியோர்கள் தங்களுக்குள் தபசில் சொத்தைப் பொறுத்து ஒரு ஒப்பந்தம் எழுதிக்கொண்டனர் என்றும், 09.01.2015-ம் தேதியில் தபசில் பாதையில் 42 அடி நீளம் சுமார் 5 அடி உயரத்தில் காண்கிரேட் சுவர் கட்டினார்கள் என்றும், அதில் 4 மற்றும் 5 பிரதிவாதிகள் அதன் அடிப்படையில் புகார் கொடுத்தார்கள் என்றும், மேலும், 1 மற்றும் 2 பிரதிவாதிகள் சர்வே எண்.985-2/1B14-ல் வேண்டுமேன்றே சர்வே



S ABILA Digitally signed by S ABILA

எண்.985/2N/3D2 என்று குறிப்பிட்டு மோசடி திருத்தம் செய்தார்கள் என்றும், மேலும் பிரதிவாதிகள் அனைவரும் வஞ்சக கூட்டு செய்து கொண்டு வாதிக்கு சொந்தமான நடைபாதையில் அமைந்துள்ள கட்டுமான சுவரை 03.11.2015–ம் தேதிக்குள் இடிக்க வேண்டும் என்று பிரஸ்தாபித்து வந்தார்கள் என்றும், மேலும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை மீறி 07.11.2015–ம் தேதி 4 மற்றும் 5 பிரதிவாதிகளின் தூண்டுதலின் பேரில் 1வது தபசில் கண்ட EF என்ற 2வது தபசில் கட்டுமான சுவரை இடித்து தள்ளி விட்டார்கள் என்றும், ஆகவே பாதை 1வது தபசில் சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரமும், 2வது தபசில் சொத்தை பொறுத்து செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும், இதர பரிகாரமும் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளதுமாகும்.

1ம் பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் மல்லி கிராம புல எண்.985/21B14 என்பது உட்பிரிவு செய்வது வருவாய்துறையின் பணியாகும் என்றும், உண்மையில் 23.10.2015–ல் பிரதிவாதி வாதிக்கு ஆக்கிரமிப்பு சம்மந்தமான கடிதம் அனுப்பியது உண்மை என்றும், மேலும் வாதி சொத்து விபரத்தில் சொல்லியுள்ள மல்லி புல எண்.985–2/1B14 வருவாய் துறை ஆவணங்களில் பூஸ்தி பாதை என பதிவு ஏற்பட்டு பிற்பாடு பொது தெருவாக வெகு காலமாக பொதுமக்களால் புழங்கப்பட்டு வருகிறது என்றும், மேற்படி 985–2/1B14 தற்சமயம் தென்வடல் தெருவாகும் என்றும், மேற்படி வாதி வழக்கில் சொல்லியுள்ள அரசுக்கு பாத்தியமான தெருவில் ஆக்கிரமிப்பு பகுதி அகற்றப்பட்டுவிட்டது என்றும், ஆகவே வாதி வாதியின் கோரிக்கை பயனற்றது என்றும் கூறியுள்ளதுமாகும்.

4 மற்றும் 5 பிரதிவாதிகள் தனது எதிர்வழக்குரையில் பிராது தபசில் சொத்து வாதியின் வீட்டிற்கும் மற்ற பங்காளிகள் வீட்டிற்கும் கிழக்கு பக்கம் அமைந்துள்ள A B C D தென்வடல் பாதை என்பதை ஒப்புக்கொள்ளும் வாதி அதில் தனித்து உரிமை கோர வாதிக்கு எவ்வித பாத்தியமும், உரிமையும் கிடையாது என்றும், மேலும் 19.08.2013 மற்றும் 19.10.1975 தேதியிட்ட கிரைய ஆவணங்களின் படி தபசில் சொத்தான தெரு சர்வே எண். 985/2B1 –2 ல் அடங்கியுள்ளதாக கூறுவது தவறு என்றும், ஆரம்ப காலம் முதல் தபசில் சொத்தானது அரசு பாத்தியப்பட்ட தெருவாக இருந்து வருவதால் நிலஉடமை மேம்பாட்டு திட்டத்தின் போது சர்வே எண்.985/2N என உட்பிரிவு



S ABILA Digitally signed by S ABILA

செய்யப்பட்டு தெருவாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் 4, 5 பிரதிவாதிகளின் புகாரின் பெயரில் தபசில் சொத்தை முறையாக சர்வே செய்யாமல் 1 முதல் 5 பிரதிவாதிகள் சட்டத்திற்கு புறம்பாக வாதியின் வீட்டிற்கு கிழக்கே அமைந்துள்ள தென்வடல் சுவரை இடிக்க முற்படுவது சட்டத்திற்கு விரோதமான செயல் என்று வாதி தரப்பில் கூறப்பட்ட நிலையில் தான் சட்டத்திற்கு விரோதமாக வாதியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு எழுப்பபட்ட EF சுவர் முழுவதும் 07.11.2015-ம் தேதியில் அரசாங்கத்தால் அப்புறப்படுத்தப்பட்டது என்றும், தபசில் சொத்தான தெருவிற்கு தற்போது சர்வே எண்.985/2 என்பதை தவிர 985/2/1B14 அல்ல என்றும், தபசில் சொத்து மேலே கூறியபடி அரசுக்கு சொந்தமான தெரு என்பதனால் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் கூறியுள்ளதுமாகும்.

வாதி தனது வழக்கை நிரூபணம் செய்வதற்கு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.16 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளதுமாகும். வா.சா.ஆ.1 பிராது வரைபடத்தில் A B C D என்று பிராது வரைபடத்தில் 1வது தபசில் சொத்தையும், E F என்று பிராது 2வது தபசில் சொத்தையும் காட்டப்பட்டுள்ளதுமாகும். அவ்வகையில் பிராது 1வது தபசில் சொத்து அயன் புஞ்சை சர்வே எண்.985/1B2 நில் ஏக்கர் 1ல் உள்ள நிலத்தில் கீழ்பாதி செண்டு 50 உள்ள நிலம் தற்போதைய உட்பிரிவு 985-2/1B14 சுமார் 250 அடி நீளமும் 13 அடி அகலமும் உள்ள நடைபாதை பிராது வரைபடம் A B C D ஆகும். மேலும் 2வது தபசில் சொத்தானது E F தென்வடல் சுவர் 42 அடி நீளம் 5 அடி உள்ள காண்கிரேட் சுவர் ஆகும்.

வாதி தரப்பு ஆவணங்கள் மற்றும் சாட்சிகள் ஆகியவற்றை ஆராயும் பொழுது வா.சா.ஆ.2 பெருமாள்சாமி மனைவி லலிதாஅம்மாள் பெயரில் உள்ள புல எண் உட்பிரிவு 985-21B14-க்கான பட்டா ஆகும். மேலும் வா.சா.ஆ.3 ஒப்பந்தத்தில் பிராது 1வது தபசில் சொத்து குறித்து எதுவும் குறிப்பிடவில்லை என்பதும் தெரியவருகிறது. வா.சா.ஆ.4 ஆவணத்தை ஆராயும் பொழுது "கிழக்கு தெருவுக்கும்" என்று தபசில் விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதும் தெரியவருகிறது. மேலும் வா.சா.ஆ.5 யை ஆராயும் பொழுது 985-2/1B14 ஆனது பெருமாள்சுவாமி நாயக்கர் மற்றும் ஐவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளதும் தெரியவருகிறது. வா.சா.ஆ.11 ஆனது வாதி 2ம் பிரதிவாதிக்கு அனுப்பிய புகார் கடிதம் என்பதும் தெரியவருகிறது. வா.சா.ஆ.14-யை ஆராயும் பொழுது



S ABILA Digitally signed by S ABILA

தபசில் சொத்து விவரம்

வடக்கு – ச.சீனிவாச நாயக்கர் பாக வீடும் பொதுச்சுவரும், மனையும்

தெற்கு – செ.தருமகிருஷ்ணன், வெ.சீனிவாசகன் வீடும் பொதுச்சுவரும்

மேற்கு – தென்வடல் தெரு, ரா.மோகன் குமார் கிரையம் பெறும் காலிமனை

கிழக்கு – தென்வடல் தெரு.

இதற்குள்பட்ட கிழமேல் அடி 102–1/2 (நூற்றி இரண்டரை) தென்வடல் அடி 20–1/2 (இருபதரை) உள்ள 2101.25 சதுரடி காலிமனை விஸ்தீரணம் பூராவும் 195.21 சதுரமீட்டர் பரப்பளவுள்ள மனையிடம் பூராவும், சுமார் 60 வருட கால மண்சுவர் காரைக் கட்டிடம் 9 சதுரமீட்டர், கட்டிடமும், 9 சதுரமீட்டர் தகரம் போட்ட வீடும், மாமூல் பொது வழி நடைபாதை பாத்தியமும் அதன் சகல சமஸ்த்த பாத்தியங்களும் தபசில் சரி. என்று குறிப்பிட்டுள்ளதுமாகும்.

மேலும் வா.சா.ஆ.14–ல் கிழக்கு தென்வடல் தெரு என்று குறிப்பிடப்பட்டுள்ளதும் தெரியவருகிறது. வா.சா.ஆ.12 ஆனது உதவி ஆட்சியர் அலுவலகத்திற்கு ஒ.மு.ஆ 2/4982/2015–க்கான குறிப்பாணை என்பது தெரியவருகிறது. மேலும் பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் மற்றும் சாட்சிகளை ஆராயும் பொழுது பி.வா.சா.ஆ.1 "The parties concerned shall work out their remedy before the civil Court. It is made clear that the said suit shall be decided by the civil Court, independently, based on its own merits." என்று சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் கூறியுள்ளதுமாகும்.

பி.வா.சா.ஆ.2 " The petitioner has not placed any evidence to show that the aforesaid interim order passed by the Court has been informed to the respondent authority on or before 07.11.2015. In the absence of the said particulars placed before 07.11.2015. In the absence of the said particulars placed before this Court, we are not inclined to accept the contention of the petitioner. Therefore, no contempt is made out and the respondents are discharged from the contempt proceedings. என்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, உத்தரவு பிறப்பித்துள்ளதுமாகும். மேலும் பி.வா.சா.ஆ.4 புல எண்.985/உட்பிரிவு 3 அடிக்குரிய பலராமன் பெயரில் உள்ள பட்டா ஆகும். பி.வா.சா.6 ஆராயும் பொழுது " அப்பைநாயக்கன்பட்டி புல எண்.985/2 பல உட்பிரவுகளாக பிரிக்கப்பட்டுள்ளதில்



S ABILA Digitally signed by S ABILA

985/2Nல் தென்வடல் தெரு அமைந்துள்ளது. மேற்படியிடம் அகலம் வடபக்கம் 3.4 மீ எனவும தென்பகுதியில் 3.2 மீ எனவும் பதிவுகள் உள்ளது. இந்த தெருவின் கிழக்குப் பகுதியில் புல எண்.985/3A முதல் 985/3F வரை அமைந்துள்ளது. இதில் 985/3D ஆ.பலராமன் எனப் பட்டா உள்ளது. பலராமன் என்பவரது புல எண்.985/3D ன் மேற்குப்புறம் மேற்குப் பக்க வாசல் உள்ளது. அந்த வாசல் பகுதியில் சுவர் வைத்து மறைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சுவர் வைத்து மறைக்கப்பட்ட பகுதி பலராமன் பெயரில் அமைந்துள்ள வீட்டின் எல்லை அளவுக்குள் அமைந்துள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." என்று உரிய ஆட்சியரால் சிவகாசி அவர்களால் கொடுக்கப்பட்ட குறிப்பாணையாகும்.

மேலும் பி.வா.சா.ஆ.7 ஆராயும் பொழுது புலத்தின் தெரு சிமெண்ட் தெருவாகவும், இதன் கிழக்குப் பகுதியில் 985/3D பலராமன் என்வரது பெயரில் பட்டாவாகவும், பலராமன் என்பவரது வீட்டின் மேற்கு பக்கம் வாயில் அமைத்து, அப்பகுதியில் 985/3D ல் உள்ள பட்டா இடத்திற்குள்ளேயே 3 அடி அளவு உயரத்தில் செங்கல் சுவர் வைத்து, பலராமனின் எதிராளியால் மறைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளதுமாகும். பி.வா.சாஆ.8 குறிப்பாணையை ஆராயும் பொழுது ஆக்கிரமிப்புதாரர் " 05.11.2015–ம் தேதிக்குள் ஆக்கிரமிப்பை அகற்றிக் கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார். அவ்வாறு ஆக்கிரமிப்பை அகற்றாமல் இருக்கும்பட்சத்தில் வருவாய்த்துறை மற்றும் காவல்துறை உதவியுடன் அக்கிரமிப்பு செய்துள்ள பகுதியை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்" என்று விவரம் இதன்மூலம் தெரிவிக்கிறது என்று கூறப்பட்டுள்ளதுமாகும்.

மேலும் பி.வா.சா.ஆ.9 மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றப்பட்டதன் அடிப்படையில் கொடுக்கப்பட்ட அறிவிப்பு ஆகும். பி.வா.சா.ஆ.10 சர்வே எண்.985/1B–க்கான வில்லங்க சான்றிதழில் " சர்வே எண்.985/1B12 எல்லை விவரம்: கிழக்கு – தென்வடல் தெரு, மேற்கு – தென்வடல் தெரு, ரா.மோகன்குமார் வீடு, வடக்கு – ச.சீனிவாச நாயக்கர் பாக வீடும் பொதுச்சுவரும் மனையும், தெற்கு – வெ.தருமகிருஷ்ணா வெ.சீனிவாசகன் வீடும் பொதுச்சுவரும்." என்று குறிப்பிட்டுள்ளதும் தெரியவருகிறது.

வா.சா.1 குறுக்கு விசாரணையில் "வா.சா.ஆ.3 (Agreement)ல், மாதிரி வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 1வது தபசில் சொத்து குறித்து எதுவும்



S ABILA Digitally signed by S ABILA

குறிப்பிடவில்லை என்றால் சரிதான், மேற்படி ஆவணம் 1963 ல் எழுதப்பட்டது ஆகும். வா.சா.ஆ.4 கிரையப்பத்திரத்தில் தபசில் விபரத்தில் கிழக்கில் தெரு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.14 சொத்து விபரத்தில் கிழக்கு தென்வடல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.14 கிரைய பத்திரங்களில் 1ம் தபசில் சொத்து குறித்து எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.14 ல் சர்வே எண். 985–2/1B12 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பிராதில் குறிப்பிட்டுள்ள 1வது தபசில் சொத்து சம்பந்தமாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் 1963 ல் ஏற்படுத்துப்பட்டுள்ள ஒப்பந்தத்தை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வா.சா.ஆ.3 ஒப்பந்தத்தை யார் ஏற்படுத்தினார்கள் யார் கையொப்பம் செய்தார்கள் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 ல் யார் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 ல் மால்கள் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் குறிப்பிட்டுள்ள 50 சென்ட் நிலத்தை பொறுத்து யார் யார் எவ்வளவு அனுபவம் செய்து வருகிறார்கள் என்பது குறித்து என்னுடைய வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கு எவ்வாறு மேற்படி சொத்து பாத்தியம் என்பது குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான், " என்று வா.சா.1 சாட்சியம் அளித்துள்ளதுமாகும்.

மேற்படி சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை ஆராயும் பொழுது வாதி தரப்பில் பிராது தபசில் சொத்தானது சர்வே எண்.985–2/1B14 என்றும், வேண்டுமேன்றே சர்வே எண்.985/2N3D2 என்று மோசடியாக 1, 2, 3 பிரதிவாதிகள் திருத்தம் செய்துள்ளார் என்று கூறியுள்ள நிலையில் பிரதிவாதிகள் தரப்பில் பிராது தபசில் சொத்தானது சர்வே எண்.985/2N என்றும், 985/21B14 அல்ல என்றும் கூறியுள்ள நிலையில் தபசில் சொத்தில் சர்வே எண் மற்றும் மால் விவரம் வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்கும் சுமை வாதிகளை சார்ந்ததுமாகும். வாதிகள் தாக்கல் செய்துள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆராயும் பொழுது பிராது தபசில் சொத்து சர்வே எண்.985–2/1B14 என்பதை நிரூபணம் செய்வதற்கு ஏதுவான எவ்வித



S ABILA Digitally signed by S ABILA

ஆவணங்களும், சாட்சியங்களும் முன்னிலைப்படுத்தாததுமாகும். மேலும் வா.சா.1 குறுக்கு விசாரணையில் " தபசில் சொத்து சம்பந்தமாக அளந்து வரைபடம் மற்றும் அறிக்கை தாக்கல் செய்வதற்கு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யக் கோரி மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து இடத்தை பார்வையிட்டால் உண்மையான சர்வே எண மற்றும் நடைபாதை பற்றிய விபரங்கள் தெரியவரும் என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளதுமாகும்.

பிராது தபசில் சொத்தானது வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்பதை நிரூபணம் செய்வதற்கான பொதுவான சான்றாவணங்கள், சாட்சியங்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை என்பதுமாகும். மேலும் பிராது தபசில் சொத்து சர்வே எண் மற்றும் பிராது தபசில் சொத்தில் வாதிகளால் சொல்லப்பட்ட "E F" என்று ஆக்கிரமிப்பு குறித்து அறிய நீதிமன்றம் மூலம் ஆணையர் நியமனம் செய்வதற்கு வாதிகள் தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததுமாகும். அவ்வகையில் பிராது தபசில் சொத்தானது வாதிகளுக்கும், பங்காளிகளுக்கும் பாத்தியப்பட்ட தனிப்பட்ட நடைபாதை என்பதை நிரூபணம் செய்வதற்கு வாதிகள் தரப்பில் போதுமான ஆதரங்களும், போதுமான சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களும் மேலும் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்படாதது ஆகும். அவ்வகையில் வாதி குறிப்பிடும் வாதியின் பங்காளிகளை கட்சி சேர்க்கப்படாததுமாகும். அவ்வகையில் மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விடயங்களிலிருந்து பிராது தபசில் சொத்தானது வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆக வாதிக்கு தாவா சொத்தின் மீது தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கிடைக்காத பட்சத்தில், வாதிக்கு தாவா சொத்தின் மீது செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாததுமாகும். அவ்வகையில் வழக்கெழு வினா ஒன்று மற்றும் இரண்டு வாதிகளுக்கு எதிராக முடிவு காணப்படுகிறது.

<u>வழக்கெழு வினா –3</u>

வழக்கெழு வினா 1 மற்றும் 2 வாதிகளுக்கு எதிராக முடிவு கண்டுள்ள நிலையில் வழக்கெழு வினா 3–ஆனது முடிவு காண 3ம் பிரதிவாதியின் எதிர் வழக்குரையில் "ஸ்ரீவில்லிப்புத்துார் வட்டாட்சியர் அவர்கள் காவல் துணை கண்காணிப்பாளர், ஸ்ரீவில்லிப்புத்துார் அவர்களுக்கு வட்டாட்சியர் அலுவலக ந.க.ஆ.1/12464/2015 நாள்



S ABILA Digitally signed by S ABILA

06.11.2015 கடிதப்படி 07.11.2015 அன்று மல்லி கிராமத்தில் வட்டாட்சியர் தலைமையில் நில அளவை செய்வதற்கு பாதுகாப்பு வழங்கி கோரியிருந்தார். அதன்படி இந்நிர் பிரதிவாதி பந்தோபஸ்து ஏற்பாடு செய்து கொடுத்தார். அது சமயம் மல்லி VAO தர்மகிருஷ்ணன் மற்றும் 11 பேர் அளவீடு செய்வதற்கு இடையூறு செய்து கொலை மிரட்டல் செய்வதாக மல்லி காவல்நிலையத்தில் 07.11.2015–ல் புகார் கொடுத்தார்" என்று எதிர் வழக்குரையில் கூறியுள்ளதுமாகும். மேற்படி விவரங்களிலிருந்து ஆராயும் பொழுது இவ்வழக்கில் எவ்வித வழக்கு மூலமும் 3ம் பிரதிவாதிக்கு எதிராக இல்லாததும், மேலும் 3ம் பிரதிவாதிக்கு எதிராக கோரியுள்ள பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று நீதிமன்றம் கருதுகிறது. அவ்வகையில் இவ்வழக்கிற்கு 3ம் பிரதிவாதி அவசியமற்ற தரப்பினர் என்று முடிவு காணப்படுகிறது.

**<u>வழக்கெழு வினா– 4</u>**

இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில்கொண்டு வழக்கின் செலவுத்தொகைகளை அவரவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டுமென எழுவினா மூன்றிற்கு விடை காணப்படுகிறது.

1) இவ்வழக்கானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

2) வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

3) 1முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

4) செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜுன் மாதம் 22–ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S ABILA Digitally signed by S ABILA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

**வாதி தரப்பு சாட்சிகள் –**

வா.சா.1 – தசரதப்பெருமாள்

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | – | மேற்படி பிராது தபசில் சொத்தைக் காட்டக்கூடிய அளவுக்குட்படாத வரைபடம் – அசல் |
| வா.சா.ஆ.2 | – | 15–04–2015 தேதியிட்ட பிராது தபசில் சொத்தை காட்டக்கூடிய பட்டா எண் – 1885, சர்வே எண்.985–2 1B14 – அசல் |
| வா.சா.ஆ.3 | – | 25–04–1963 தேதியிட்ட பிராது தபசில் சொத்தை பொறுத்து வாதியின் பங்காளிகள் எழுதிக் கொண்ட நடைபாதை ஒப்பந்தம் – அசல் |
| வா.சா.ஆ.4 | – | 19–10–1975 தேதியிட்ட ரெங்கசாமி நாயக்கர் லலிதா அம்மாளுக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரம் – அசல் |
| வா.சா.ஆ.5 | – | 16–04–2015 தேதியிட்ட பிராது தபசில் சொத்தைப் பொறுத்து வருவாய்துறை அதிகாரிகளால் வழங்கப்பட்ட 'அ' பதிவேடு – அசல் |
| வா.சா.ஆ.6 | – | 25–01–2015 தேதியிட்ட 4ம் பிரதிவாதி மனோன்மணி மல்லி காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்த 'முச்சலிக்கா' – உண்மை நகல் |
| வா.சா.ஆ.7 | – | 30–04–2015 தேதியிட்ட பிராது தபசில் சொத்தை பொறுத்து வாதி 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய புகார் மனு – நகல் |
| வா.சா.ஆ.8 | – | 06–05–2015 தேதியிட்ட மேற்படி மனுவை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை – அசல் |
| வா.சா.ஆ.9 | – | 30–04–2015 தேதியிட்ட பிராது தபசில் சொத்தைப் பொறுத்து வாதி 2ம் பிரதிவாதிக்கு அனுப்பிய புகார் மனு – நகல் |
| வா.சா.ஆ.10 | – | 05–05–2015 தேதியிட்ட மேற்படி மனுவை 2ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை – அசல் |
| வா.சா.ஆ.11 | – | 20–10 –2015 தேதியிட்ட வாதி 1ம் பிரதிவாதி மீது 2ம் பிரதிவாதியிடம் பிராது தபசில் சொத்தைப் பொறுத்து கொடுத்த புகார் மனு – நகல் |
| வா.சா.ஆ.12 | – | 27–10–2015 தேதியிட்ட வாதிக்கு 2ம் பிரதிவாதி பிராது தபசில் சொத்தைப் பொறுத்து அனுப்பிய குறிப்பாணை – அசல் |
| வா.சா.ஆ.13 | – | 30–10–2015 தேதியிட்ட வாதி முன்ஜாமீன் கேட்டு தாக்கல் செய்த மனு – நகல் |
| வா.சா.ஆ.14 | – | 19–08–2013 தேதியிட்ட வாதிக்கு, லலிதா எழுதிக் கொடுத்த கிரையயப்பத்திரம் – சப்ரி நகல் |
| வா.சா.ஆ.15 | – | 19–10–2015 தேதியிட்ட வாதி செலுத்திய தீர்வை – அசல் (எண்ணம்–1) |

S ABILA Digitally signed by S ABILA

வா.சா.ஆ.16 05.11.2015 தேதியிட்ட W.P.(MD) No.20083/2015 ல் பிராது தபசில் சொத்தைப் பொறுத்து பிரதிவாதிகளுக்கு எதிராக வழங்கப்பட்ட Interim Stay நகல்

பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்

பி.வா.சா.1 – மனோன்மணி (4 ம் பிரதிவாதி)

பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்–

| | |
|---|---|
| பி.வா.சா.ஆ.1 | WP.(MD)No.20083/2015 என்ற வழக்கின் உத்தரவு கணிணி நகல் |
| பி.வா.சா.ஆ.2 | நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.37/2016 ன் உத்தரவு கணிணி நகல் |
| பி.வா.சா.ஆ.3 | 29–11–2013 தேதியிட்ட தவமணி மற்றும் பத்மாவதி ஆகியோர்கள் சேர்ந்து 4 ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் – சார்பதிவக நகல் |
| பி.வா.சா.ஆ.4 | 4 ம் பிரதிவாதியின் தாய்வழி தாத்தா பலராமன் பெயரில் உள்ள பட்டா – கணிணி நகல் |
| பி.வா.சா.ஆ.5 | 4 ம் பிரதிவாதி பெயரில் உள்ள வீட்டுவரி தீர்வை ரசீது – அசல் |
| பி.வா.சா.ஆ.6 | 08–07–2015 தேதியிட்ட 4 ம் பிரதிவாதி கணவர் (5 ம் பிரதிவாதி மகன்) ஜெயச்சந்திரனுக்கு திருவில்லிபுத்தூர் வட்டாட்சியர் அனுப்பிய அறிக்கை – அசல் |
| பி.வா.சா.ஆ.7 | 11–09–2015 தேதியிட்ட மேற்படி ஜெயச்சந்திரனுக்கு சிவகாசி சார் ஆட்சியர் அனுப்பிய குறிப்பாணை – அசல் |
| பி.வா.சா.ஆ.8 | 28–10–2015 தேதியிட்ட மேற்படி ஜெயச்சந்திரனுக்கு திருவில்லிபுத்தூர் வட்டாட்சியர் அனுப்பிய குறிப்பாணை – அசல் |
| பி.வா.சா.ஆ.9 | 18–11–2015 தேதியிட்ட மேற்படி ஜெயச்சந்திரனுக்கு சிவகாசி சார் ஆட்சியர் அனுப்பிய குறிப்பாணை – அசல் |
| பி.வா.சா.ஆ.10 | வில்லங்க சான்றிதழ் – கணிணி நகல் |

S ABILA Digitally signed by S ABILA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.